# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 111 ★ 22.08.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ. 5/- சென்னை

★Volume:05 ★Issue:111 ★22.08.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# விவசாயிகளுக்கு 50,000 புதிய மின் இணைப்புகள்: அமைச்சர் நிர்மல் குமார் அறிவிப்பு

## இலவச மின் இணைப்புகள் வழங்கப்படுமா? என விவசாயிகள் கேள்வி

சட்டப்பேரவையில் மின்துறை சார்பில் 17 அறிவிப்புகளை வெளியிட்ட அமைச்சர் நிர்மல் குமார், விவசாயிகளுக்கு 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். அவை இலவச மின் இணைப்பா என விவசாயிகள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

சட்டப்பேரவையில் மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் மின்துறை சார்பில் 17 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அவற்றின் சில அறிவிப்புகளின் விவரம்: தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தால் 202627 ஆம் ஆண்டில் 50,000 புதிய விவசாயம் மின் இணைப்புகள் வழங்கப்படும்

நுகர்வோர் தங்களது புகார்களை பதிவு செய்யவும், அவற்றின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கவும் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் வாட்ஸ் அப்பில் தானாகவே பதில் அளிக்கும் மென்பொருள் வசதி உருவாக்கப்படும்.

பணியிட மாறுதல்கள் மற்றும் பதவி உயர்வில் பணியிட நியமனங்களுக்கு இணைய வழி கலந்தாய்வு நடத்துவதற்கான மென்பொருள் செயலி உருவாக்கப்பட்டு தற்போதுள்ள மனித வள



மேலாண்மை அமைப்புடன் இணைக்கும் பணி ரூ.8.26 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

வீட்டு மின் இணைப்புக் கோரும் புதிய விண்ணப்பதாரர்களுக்கு கள ஆய்வு இல்லாமலேயே சுய உறுதிமொழி அடிப்படையில் புதிய மின் இணைப்பு வழங்கப்படும். இதன் மூலம் புதிய மின் இணைப்பு கோரும் வீட்டு விண்ணப்ப தாரர்களுக்கான செயல்முறை எளிதாக்கப்படும். என்பன உள்ளிட்ட 17 அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த திமுக ஆட்சியில் ஆண்டு தோறும் 1 லட்சம் அல்லது 50 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது மின் துறை வெளியிட்ட அறிவிப்பில் புதிய மின் இணைப்புகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது இலவச மின் இணைப்பா அல்லது ஏற்கெனவே பெற்ற தட்கல் விண்ணப்பங்களுக்கான மின் இணைப்பா என விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தலைமையில்

# மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.08,2026) நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதம் வரை ஆண்டு மழையளவான 384 மி.மீக்கு தற்பொழுது வரை 398 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது ஆகஸ்ட் மாதம் வரை ஆண்டு இயல்பான மழையளவில் 14 மி.மீ அதிகமாகும். ஆகஸ்ட் 2026 மாதத்திற்கான இயல்பு மழையளவான 43 மி.மீ.க்கு தற்பொழுது வரை 88.29 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது ஆகஸ்ட் மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 45.29 மி.மீ அதிகமாகும்.

தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 703 ஹெக்டர் பரப்பிலும், சிறுதானியம் 481 ஹெக்டர் பரப்பிலும், பயறு வகைகள் 890 ஹெக்டர் பரப்பிலும், எண்ணெய் வித்துப் பயிர்வகைகள் 434 ஹெக்டர் பரப்பிலும், தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள் 18,748 ஹெக்டர் பரப்பிலும், காய்கறி பயிர்கள் 4,652 ஹெக்டர் பரப்பிலும், மலைத்தோட்ட பயிர்கள் 35,269 ஹெக்டர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 3,099 ஹெக்டர் பரப்பிலும், மலர்ப்பயிர்கள் 518 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 243 மெ.டன்னும், சிறுதானியங்கள் 16 மெ.டன்னும், பயறு வகை விதைகள் 14.8 மெ.டன்னும், எண்ணெய் வித்துப் பயிர் விதைகள் 4.442 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் நடப்பு பருவ சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 1,441 . (MFL, Spic & IFFCO), DAP 732 (Green star, IPL & IFFCO) பொட்டாஷ் 833 மெ.டன் (IPL) மற்றும் கலப்பு உரங்கள் 3,562 மெ.டன்னும் (Fact. GFL, CIL, IFFCO) தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மக்காச்சோளப்பயிரின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் திட்டத்தில் குழு செயல் விளக்கம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒரு ஹெக்டருக்கு ரூ. 11,500/ மதிப்புள்ள விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரம். உயிரியல் காரணிகள் ஆகியவை வழங்கப்படவுள்ளது.

இத்திட்டம் கடமலைக்குண்டு, தேனி, சின்னமனூர் மற்றும் போடிநாயக்கனூர் வட்டாரங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

ஆர்வமுள்ள விவசாயி கள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க அலுவலரை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இனிவரும் காலங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு உரம் மற்றும் மானியத் திட்டங்களை தடையின்றி பெற்றிட விவசாய அடையாள எண்ணைப் பெறுவதுடன், தங்களது அனைத்து உட்பிரிவுகளையும் அடையாள எண்ணுடன் இணைக்க வேண்டும்.

ஆதலால் நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் அடையாள எண்ணினை பெற ஆதார், ஆதார் உடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் மற்றும் நில ஆவணங்களான சிட்டா அல்லது பட்டா ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய பதிலினை விவசாயிகளுக்கு வழங்கிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராஜகுமார், மாவட்ட வன அலுவலர் திரு.கிரண், இ.வ.ப., வேளாண்மை இணை இயக்குநர் திருமதி பாலசரஸ்வதி, இணைப்பதிவாளர் (கூட்டுறவு) திருமதி நர்மதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திருமதி வளர்மதி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

உச்சநீதிமன்ற தீர்ப்பை மனதார ஏற்க முடியாமல்

# கண்ணீர் மல்கிய வருஷநாடு சலவைத்தொழிலாளி பஞ்சன்; மலைக்கிராம மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரிக்கை

ஸ்ரீவில்லிபுத்தூர்–மேகமலை புலிகள் சரணாலயம் தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை மனதார ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவும், பல தலைமுறைகளாக இப்பகுதியில் வாழ்ந்து வரும் மலைக்கிராம மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றக் கூடாது எனவும் வருஷநாடு பகுதியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி பஞ்சன் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

“நாங்கள் இந்த மலைப் பகுதியில் நேற்று வந்து குடியேறியவர்கள் அல்ல. எங்களுடைய முன்னோர்கள் காலத்திலிருந்தே இந்த மண்ணையும், மலையையும் நம்பித்தான் வாழ்ந்து வருகிறோம். எங்கள் வாழ்க்கையும், எங்கள் உழைப்பும், எங்கள் பிழைப்பும் இந்த மலைப் பகுதியோடு பின்னிப் பிணைந்திருக்கிறது.

காலை எழுந்ததும் எங்களுக்கு தெரியும் உலகம் இந்த மலையும், இந்த மண்ணும், இந்த மக்களும்தான். இங்கே வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இந்த மலை வெறும் வனப்பகுதி கிடையாது. இதுதான் எங்களுடைய வாழ்வாதாரம். எங்கள்குழந்தைகளின் எதிர்காலம். எங்களுடைய முன்னோர்களின் நினைவுகள். எங்களுடைய வாழ்க்கையின் அடையாளம்.

நாங்கள் இயற்கைக்கு எதிரானவர்கள் அல்ல. புலிகளும், யானைகளும், மான்களும் உள்ளிட்ட வனவிலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கும் முழுமையான அக்கறை இருக்கிறது. வனத்தையும், வனவிலங்குகளையும் பாதுகாப்பதன் அவசியம் எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நாங்களே இந்த மலைப்பகுதியோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

ஆனால் வனவிலங்குகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, பல தலைமுறைகளாக இங்கு வாழ்ந்து வரும் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை அழித்து விடக்கூடாது. எங்களை எங்காவது அழைத்துச் சென்று குடியமர்த்திவிட்டால் மட்டும் எங்களுடைய வாழ்க்கை தொடர்ந்துவிடாது.

நாங்கள் செய்யும் தொழில் என்ன? எங்களிடம் இருக்கும் நிலம் என்ன? எங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளி எங்கே? எங்களுடைய கால்நடைகள் எங்கே? எங்கள் உறவுகள் எங்கே? எங்கள் வாழ்வாதாரம் எங்கே? இதையெல்லாம் யாராவது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு இடத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு,



ஒரே நாளில் அந்த இடத்தைவிட்டு வெளியேறுங்கள் என்று சொன்னால் அந்த வலி என்ன என்பதை எங்களைப் போன்ற ஏழை மக்களிடம் கேட்டால் தான் தெரியும்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் மதிக்கிறோம். நீதிமன்றத்தின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அந்தத் தீர்ப்பின் விளைவாக எங்களைப் போன்ற மலைக்கிராம மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். எங்களை வெளியேற்ற வேண்டும் என்ற முடிவை மட்டும் எடுக்காமல், எங்களுடைய நிலைமையையும் நேரில் வந்து பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு வாழும் ஒவ்வொரு குடும்பத்தையும் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை கேட்க வேண்டும். நாங்கள் அரசிடம் பெரிய பெரிய கோரிக்கைகளை வைக்கவில்லை. எங்களுடைய வாழ்வாதாரத்தை மட்டும் விட்டுவிடுங்கள். எங்கள் பிள்ளைகள் இங்கேயே வளரட்டும். எங்கள் உழைப்பை நம்பி நாங்கள் இங்கேயே வாழ அனுமதியுங்கள்.

எங்களைப் பார்த்து யாரும் வனத்தை அழிப்பவர்கள் என்று நினைக்க வேண்டாம். வனத்தை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது. ஆனால் வனத்தை பாதுகாக்கும் பெயரில் வனத்தைச் சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பற்றதாக மாற்றக்கூடாது. எங்களை நம்பி எங்கள் குழந்தைகள் இருக்கிறார்கள். எங்கள் குடும்பங்கள் இருக்கின்றன.

எங்களுடைய எதிர்காலமே இந்த மண்ணை நம்பித்தான் இருக்கிறது.

இன்று இந்த தீர்ப்பை கேட்டதும் மனது மிகவும் வேதனைப்படுகிறது.

எங்களுடைய வாழ்க்கை என்ன ஆகுமோ என்ற பயம் ஏற்பட்டுள்ளது. எங்களை வெளியேற்றாமல், எங்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாத்து, இந்த மண்ணிலேயே நாங்கள் தொடர்ந்து வாழ வழிவகை செய்ய வேண்டும். எங்களை வெளியேற்ற வேண்டாம். எங்களை கைவிட வேண்டாம். எங்களை நம்பி இருக்கும் மக்களை நாங்கள் கைவிடவில்லை; அவர்களும் எங்களை கைவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எங்களை நம்பித்தான் நான் இருக்கிறேன். இந்த மலைக்கிராம மக்களை நம்பித்தான் என் வாழ்க்கையும் இருக்கிறது. எங்களுடைய குரலை அரசு கேட்க வேண்டும். எங்கள் கண்ணீரையும், எங்கள் வாழ்க்கையையும் புரிந்து கொள்ள வேண்டும்” என்று சலவைத் தொழிலாளி பஞ்சன் உருக்கமாக தெரிவித்தார்.

பல தலைமுறைகளாக மலைப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரம், குடியிருப்பு, கல்வி, தொழில் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு, அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு பதிலாக மனிதநேயத்துடன் கூடிய தீர்வை அரசு ஏற்படுத்த வேண்டும் என்பதே மலைக்கிராம மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸாக வெளியிட்டால் நடவடிக்கை: பேரவைத் தலைவர் எச்சரிக்கை

‘அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸாக வெளியிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று சட்டப்பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பேசியதாவது: பேரவையில் கேள்வி எழுப்பினால், நாங்களே ஆச்சரியப்படும் அளவுக்கு அமைச்சர்கள் பதில் கூறுகின்றனர்.

சட்டப்பேரவையா, சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியா என்று சந்தேகப்படும் அளவுக்கு பாட்டுகூட பாடுகின்றனர். பதில் அளிக்கும் அமைச்சர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆதாரம் இல்லாத குற்றச் சாட்டை முன்வைக்கும்போது, அவற்றை நீங்கள் (பேரவைத் தலைவர்) அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறீர்கள். பேரவை வரலாற்றில் முதல்முறையாக எதிர்க்கட்சியினரை விட ஆளுங்கட்சியினரின் பேச்சுகள்தான் அவைக் குறிப்பில் இருந்து அதிகம் நீக்கப்படுகின்றன.

நீக்குவதில் அர்த்தமில்லை அவைக் குறிப்பில் இருந்து சிலவற்றை நீக்கினாலும், அது நேரலையாக செல்லும்போது சமூக வலைதளங்களில் ரீல்ஸாக அதிகம் பகிரப்படுகின்றன. இதனால், அவைக்குறிப்பில் இருந்து நீக்குவது அர்த்தமில்லாமல் போகிறது.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா: திமுகவின் 2021 தேர்தல் அறிக்கையில் சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை செய்யப்படும் என இருந்தது. ஏன் அதை செய்யவில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்ற முதல் முறையாக பேரவை நிகழ்ச்சிகளை நேரலையில் விட்டிருக்கிறார் முதல்வர்.

அமைச்சர் ஆனந்த்: நேற்று ஒரு சந்தையில் 70 வயது முதியவர், ‘நாங்கள் இப்போது தொலைக்காட்சி சீரியல் பார்ப்பதில்லை. சட்டப்பேரவை நேரலைதான் பார்க்கிறோம்’’ என்றார். தமிழகத்தில் முதல்முறையாக நேரலையை அனுமதித்தவர் எங்கள் தலைவர்.

பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர்: யாருடனும் ஆலோசிக்காமல் தனது அறிவாற்றலால் சுயமாக முடிவெடுக்கும் திறமை முதல்வர் விஜய்க்கு இருப்பதை இந்த 3 மாத ஆட்சியில் எல்லோரும் பார்க்கின்றனர். உதயநிதி: திமுக ஆட்சியில்தான் நேரலை முதன் முதலாக செயல்படுத்தப்பட்டது. கேள்வி நேரத்தை நாங்கள்தான் முதல்முறையாக நேரலை செய்தோம். இப்போது கேள்வி நேரமே நடத்த முடியாத நிலைதான் உள்ளது. பேரவைத் தலைவர்: அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸ், வீடியோவாக வெளியிடக் கூடாது. அதுகுறித்து பேரவையின் கவனத்துக்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அமைச்சர் ராஜ்மோகன்: முதலில் நேரலை வழங்கியது திமுக ஆட்சி. ஆனால் முழுமையான நேரலை வழங்கியது தவெக ஆட்சி.

மத்திய அரசின் அகில இந்திய வானொலிக்கு 2 ஆண்டுகளாக பேரவையின் நேரலை ஆடியோ வழங்கப்படவில்லை. வானொலியில் நேரலையைக் கேட்க நடவடிக்கை எடுத்தவர் பேரவைத் தலைவர். இவ்வாறு விவாதம் நடை பெற்றது.

# பொதுப்பணித்துறை சார்பில் தூத்துக்குடி சிவ அரசு மேல்நிலைப்பள்ளியில் மழைநீரை தேக்கி வைத்திடும் வகையில் கட்டப்படும் மிகப்பெரிய 2. சம்புகள்

## மாவட்ட கண்காணிப்பாளர் முரளிதரன் ஐ ஏ எஸ், மாவட்ட கலெக்டர் விஜ் மகாஜன் ஐஏஎஸ் ஆகியோர் நேரில் ஆய்வு

முதலமைச்சர் ஜோசப் விஜய் நல்லாட்சிக்கு புகழ் சேர்க்கும் வகையில் கடந்த காலங்களில் பெரு மழை மற்றும் பேரிடர் காலங்களில் சிவ அரசு உயர்நிலைப் பள்ளியில் குளம் போல் மழைதண்ணீர் தேங்கி நின்று வகுப்பு அறைகளுக்கு மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரிய பெருமக்கள்நடந்து செல்ல முடியாமல் அவதிப்பட்டதை உடனடியாக சீரமைக்க பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, உத்திரவுக்கேற்ப்ப மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத், ஆலோசனைப்படி பொதுப்பணித்துறை சார்பில் ரு.25. லட்சம் மதிப்பீட்டில் மழை காலங்களில் மழைதண்ணீர் தேங்காமல் பூமிக்கடியில் செய்யக்கூடிய 2.மிகபெரிய சம்புகளை மாவட்ட கண்காணிப்பாளர் முரளிதரன் ஐஏஎஸ் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் விஜூமகாஜன் ஐஏஎஸ் ஆகியோர்நேரில்பார்வை



மிக பெரியவகை யில் 2. சம்புகள் கட்டி அதில் சி.வ.அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கக்கூடிய மழை நீரை சேமித்து வெளியேற்றி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் நடந்து செல்ல வழிவகையிட்டு பொதுப்பணித்துறையின்சார்பில் சிறப்பாக 2.சம்புகள் கட்டும் பணிகளைக் நேரில் ஆய்வு செய்து கட்டுமான பிரிவு உதவி செயற் பொறியாளர் நல்லசிங், மற்றும்பொதுப் பணித்துறை ஊழியர் களை பாராட்டினர்,

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் துவக்கி 35 ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், 35வது ஆண்டு விழாவை மிகவும் விமர்சையாக கொண்டாடப் பட்டு வருகிறது. திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சார்பில், மீஞ்சூர், கும்மிடிப்பூண்டி, சோழவரம் ஆகிய ஒன்றியங்களில் 35 மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு முதற் கட்டமாக மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி சமுதாய நலக் கூடத்தில் வேல்ஸ் மருத்துவமனையுடன் இணைந்து, இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

மஞ்சங்கரணையில் இயங்கி வரும் வேல்ஸ் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் இணை வேந்தர் மருத்துவர் கே.நாராயணசாமி அறிவுறுத்தலின்படி, பொது மருத்துவ சிகிச்சைகள் மற்றும் கண் சிகிச்சைகள், ஆகியவைகளும், உடல் பரிசோதனை மற்றும் ரத்த பரிசோதனை உட்பட பலவிதமான பரிசோதனைகளும் நடத்தப் பட்டன.




மருத்துவ முகாமை ஆத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சற்குணன் துவக்கி வைத்தார்.

காங்கிரஸ் கட்சியின் மாநில நிர்வாகி ஆத்தூர் தாஸ், தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர், பாலகிருஷ்ணன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்க தலைவர் மில்டன், மாவட்ட செயலாளர் அருள், பொருளாளர் யாகோப், செய்தி தொடர்பாளர் பழவை முத்து, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் நண்பன் எம். முகம்மது அபூபக்கர், எழில், ஆசீர்வாதம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில், 5 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், மருந்தாளுநர்கள் என 25 க்கும் மேற்பட்ட மருத்துவக் குழுவினர் வந்திருந்து ஆத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு சிகிச்சைகள் வழங்கியும், பரிசோதனைகள் செய்தும் மருந்து, மாத்திரைகளை வழங்கினர். மேலும், சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த மக்களுக்கு மருத்துவக் குழுவினர் மருத்துவ சிகிச்சை வழங்கியதுடன், உடல் நலத்தை பேணுவதற்கான அறிவுரைகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தனர். முகாமில், பரிசோதனை செய்து கொள்ளும் கர்ப்பிணி பெண்களுக்கு, வேல்ஸ் மருத்துவமனையின் சார்பில், எந்த கட்டணமும் இன்றி தொடர் மாதாந்திர சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன் இலவசமாக பிரசவமும் பார்க்கப்படும் என அறிவுறுத்தினர்.

இதனை தொடர்ந்து கும்மிடிப்பூண்டி, சோழவரம், மீஞ்சூர், ஆகிய ஒன்றியங்களில் அடுத்தடுத்து தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

### செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில்

# இலாஹி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா

செங்குன்றம் (நாரவாரிக் குப்பம்) பேரூராட்சியில் அமைந்துள்ள இலாஹி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 80வது சுதந்திர தின விழா பள்ளி தாளாளர் மௌலவி முனைவர் ஏ. ஹாஜா மொய்னுத்தீன் ஜமாலி தலைமையில் நடைபெற்றது.

அல்ஹாஜ் என்.ஆர். சையத் ஆதம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.



இதில் மாணவ மாணவிகள், ஆசிரியஆசிரியைகள், பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



### திருவண்ணாமலையில்

# ஆக.28ல் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்வு கூட்டம்

## கலெக்டர் வந்தனா கார்க் தகவல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் குறைகளை நேரில் கேட்டறிந்து, அவர்களின் தேவைகளுக்கு உரிய தீர்வு காணும் வகையில் சிறப்பு குறைதீர்வு கூட்டம் வரும் ஆக.28ம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் வரும் 28.08.2026 (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சிறப்பு குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள புதிய குறைதீர்வு கூட்ட அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



### பழநி முருகன் கோயில் அன்னதான கூடத்தில்

# ஒரே பந்தியில் 400 பேர் அமர்ந்து சாப்பிடும் வகையில் ஏற்பாடு

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 2012ல் அன்னதான திட்டம் துவங்கப்பட்டது. தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை அன்னதானம் நடைபெறுகிறது.

இதுவரையில் ஒரு பந்தியில் 200 பேர் மட்டுமே அமர வைக்கப்பட்டனர். நேற்று முதல் ஒரே பந்தியில் 400 பேர் அமர்ந்து சாப்பிடும் வகையில் இருக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

விரைவில் 500 நபர்கள் அமர்ந்து சாப்பிடும் வகையில் மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளதாக கோயில் நிர்வாகம் தெரிவித்தது.

# சென்னிமலை,ஊத்துக்குளி செல்லும் அரசு பஸ்சை நிறுத்தியதால் பொதுமக்கள் அவதி

சென்னிமலையில் இருந்து ஊத்துக்குளிக்கு சென்று வரும் அரசு டவுன் பஸ் திடீரென நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். சென்னிமலையில் இருந்து தினமும் காலை 7.05 மணிக்கு சி9 என்ற வழித்தட எண் கொண்ட அரசு டவுன் பஸ் ஒன்று புறப்பட்டு அய்யம்பாளையம், திப்பம்பாளையம் மற்றும் பாலதொழுவு வழியாக திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வரை சென்று வருகிறது. இந்த பஸ் கடந்த 4 நாட்களாக தினமும் காலையில் சென்னிமலையில் இருந்து புறப்பட்டு ஊத்துக்குளிக்கு செல்வதில்லை என தெரிகிறது.மொழிக் கற்றல் வளங்களைப் பயன்படுத்துவது

இதுகுறித்து பயணிகள் கூறுகையில், ''சென்னிமலையில் இருந்து ஊத்துக்குளி சென்று பின்னர் திருப்பூர் செல்லும் பயணிகள் மற்றும் பனியன் நிறுவன தொழிலாளர்கள்அனைவரும் சி9 என்ற வழித்தட எண் கொண்ட அரசு டவுன் பஸ்சில் பயணித்து வந்தோம். ஆனால் கடந்த 4 நாட்களாக திடீரென இந்த பஸ் நிறுத்தப்பட்டதால் வேலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளோம். அதனால் உடனடியாக அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள்தலையிட்டுநிறுத்தப்பட்டடவுன்பஸ்சைதொடர்ந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

### திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பில்

# அரசு மாதிரி பள்ளி மாணவ, மாணவியர்களுடன் காபி வித் கலெக்டர்



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைப்பெற்றகாபி வித்கலெக்டர் (Coffee with Collector) நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசு மாதிரி பள்ளி மாணவமாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர்ச.கவிதா புத்தகம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். தொடக்க கல்வி அலுவலர் ஐயப்பன், மாதிரி பள்ளியின் தலைமையாசிரியர் லலிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் (பள்ளிக்கல்வி) பவானி ஆகியோர் உடனிருந்தனர்.

# தடகளப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற மாணவரை ஊக்குவித்த தவெக நிர்வாகிகள்



மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த வடகரை அரசு ஆதி திராவிட நல ஆண்கள்மேல்நிலைப்பள்ளியில்11ஆம் வகுப்பு பயிலும் ஜெ.தீரன் மாநில அளவில் நடைபெறற் 100 மீட்டர் தடகளப் போட்டியில் 11.98 புள்ளிகள் பெற்று வெண்கலப் பதக்கம் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு அறிவுறுத்தலின் பேரில் தடகளப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்ற மாணவர் ஜெ.தீர னை தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி, பொருளாளர் சுரேஷ், தவெக நிர்வாகி லயன் ஆர்.முனுசாமி ஆகியோர்சால்வை அணிவித்து ஊக்கப்படுத்தி வாழ்த்து களை தெரிவித்துக் கொண்டனர்.

சிறப்பு பயிற்சியாளர் கோ.ஜெ. சிவம் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர்மாவட்டம்.பள்ளிப்பட்டுபேரூராட்சிவார்டுஎண்.12சந்துப்பேட்டை 2 வது தெரு பகுதியில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் வீடு வீடாக பொதுமக்களிடமிருந்து குப்பைக்கழிவுகளை தரம் பிரித்து வாங்குவதை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு, குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்க வேண்டுமென அறிவுறுத்தினார். பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலர் அபுபக்கர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### செய்யாறில் பரபரப்பு:

# பன்றி பிடிக்க வந்த செங்கல்பட்டு இளைஞர் மீது தாக்குதல்; அரசு மருத்துவமனையில் சிகிச்சை

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நேருநகர் மற்றும் அண்ணாநகர் பகுதிகளில் பன்றிகள் தொல்லை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்து வந்தனர். பன்றிகளால் வாழை மரங்கள், செடி, கொடிகள் மற்றும் நெற் பயிர்கள் சேதமடைவதாகவும் புகார் கூறப்பட்டது.

இதையடுத்து நகராட்சி ஆணையர் ஆண்ட்ரூஸ் உத்தரவின்பேரில், துப்புரவு ஆய்வாளர் மதனராசன் தலைமையில் செங்கல்பட்டு பகுதியைச்சேர்ந்த 10 பேர் கொண்ட குழுவினர் நேருநகர் பகுதியில் சுற்றித்திரிந்த பன்றிகளை பிடிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது 3 பன்றிகளை பிடித்து வேனில் ஏற்றிய நிலையில், அங்கு வந்ததாக கூறப்படும் பன்றி உரிமையாளர்கள் வேனில் இருந்த 2 பன்றிகளை விடுவித்ததுடன், பன்றி பிடிக்கும் பணியில் ஈடுபட்ட செங்கல்பட்டு பகுதியைச் சேர்ந்த சூர்யா (29) என்பவரைதாக்கியதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் பச்சை



சட்டை அணிந்திருந்த சூர்யா (29) காயமடைந்தார். இதையடுத்து அவர் சிகிச்சைக்காக செய்யாறு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.இதுகுறித்து சூர்யா அளித்த புகாரின் பேரில் செய்யாறு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படும் பன்றி உரிமையாளர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

பன்றி பிடிக்கும் பணியில் ஏற்பட்ட இந்த மோதல் காரணமாக நேருநகர் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

ஜெயமங்கலம் ஊராட்சி செயலாளரை கைது செய்யக் கோரி

# தேனியில் இந்திய பத்திரிகையாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி, பி.டி.ஓ (BDO) அவர்களின் முறையான அனுமதியுடன் ஜெயமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு கள ஆய்வு மேற்கொள்ள சென்ற பத்திரிகையாளர்களுக்கு கொலை மிரட்டல் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜெயமங்கலம் ஊராட்சி செயலாளர் கோபால் மற்றும் அவரது தூண்டுதலின் பேரில் பத்திரிகையாளர்களை தாக்கி கொலை முயற்சி செய்த நபர்கள் முன்னெடுக்கப்பட்டது. இந்த கண்டன போராட்டத்தில் சட்டநீதி பத்திரிகையின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான திரு. க.பூவரசன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

மேலும், நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகை நிரு




விடுக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து,

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக இந்திய பத்திரிகையாளர் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து, அவர்களை கைது செய்ய வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் பர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் திரளாகக் கலந்துகொண்டு தங்களது பலத்த கண்டனங்களை பதிவு செய்தனர்.

# செயின்ட் ஜோசப் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகரில் அமைந்துள்ள செயின்ட் ஜோசப் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு பள்ளி தாளாளர் எடன் புரூட்டோ தலைமையில் நடைபெற்றது. டாக்டர் பிஜிஎம். நிர்மலா அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் சீ வியூ ரோட்டரி கிளப் தலைவர் வெங்கடேஷ் ராம்ராஜ், வழக்கறிஞர்கள் என்.வி. சரவணன், வி.அருணாச்சலம், நியூ மணி டெக்ஸ்டைல் உரிமையாளர் டேவிட் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு தங்களது பள்ளிக் கால வாழ்வையும், ஆசிரிய பெருந்தகைகள் தங்களது அளித்து ஒழுக்கம்,ஊக்கத்தைகொண்டே வாழ்க்கையில் சாதித்திருக்கின்றோம் என்றனர். இப்பள்ளியில் பயின்ற நூற்றுக் கணக்கான முன்னாள் மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.



ஆசிரியப் பெருந்தகைகள் பாக்கியம், செல்வராணி, கஸ்தூரி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்வில் பள்ளி தொடங்கிய நாள்கள் முதல் இப்பள்ளியில் படித்து பல்வேறு துறைகளில் சாதித்துக் கொண்டிருப்பவர்களும், ஆசிரிய பெருந்தகைகளும் கலந்து கொண்டு தங்களது பள்ளிக் கால வாழ்வை நினைவு கூர்ந்தது அனைவர் மனதையும் கொள்ளை கொண்டது என்றால் மிகையாகாது.

# விவசாய நிலத்தில் இறந்து கிடந்த 7 வயது காட்டெருமை: உடற்கூறு ஆய்வில் அதிர்ச்சி தகவல்

## கலசபாக்கம் அருகே மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிப்பு



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அருகே விவசாய நிலத்தில் சுமார் 7 வயது மதிக்கத்தக்க காட்டெருமை உயிரிழந்த நிலையில் கிடந்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

கலசபாக்கம் அடுத்த கிடாம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட நேருநகர் பகுதியில் விவசாயி விநாயகம் தனது நிலக்கடலை சாகுபடி செய்த நிலத்துக்கு சென்றபோது, அங்கு காட்டெருமை ஒன்று உயிரிழந்த நிலையில் கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து அவர் உடனடியாக போளூர் வனச்சரக அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்தார். தகவலறிந்த வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, உயிரிழந்த காட்டெருமையை மீட்டனர்.

பின்னர் கால்நடை மருத்துவர் முன்னிலையில் காட்டெருமைக்கு உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், காட்டெருமை மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிய வந்ததாக வனத்துறையினர் தெரிவித்தனர். உயிரிழந்த காட்டெருமைக்கு சுமார் 7 வயது இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உடற்கூறு ஆய்வுக்குப் பின்னர், வனத்துறை நடைமுறைகளின்படி காட்டெருமையின் உடல் அப்பகுதியிலேயே புதைக்கப்பட்டது. இந்த ஆய்வின் போது போளூர் வனச்சரக அலுவலர் விஜய்சாரதி, கால்நடை மற்றும் வனத்துறை மருத்துவர் மணிகண்டன், வனவர் நெடுஞ்செழியன், கிராம நிர்வாக அலுவலர் பாரதிராஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# பழனி மலை கோயிலில் நடைபெற்ற உண்டியல் எண்ணிக்கை

பழனி மலை கோயிலில் இன்று நடைபெற்ற உண்டியல் எண்ணிக்கையில் ரொக்கமாக 3,60,30,714 ரூபாய் தங்கம் 635.650 கிராம் வெள்ளி 9155.800 கிராம் வெளிநாட்டு கரன்சி 918 நோட்டுக்கள் கிடைக்கப்பெற்றது

திருஆவினன்குடி கோயிலில் ரொக்கமாக 37,66,801 ரூபாய் தங்கம் 24.320 கிராம் வெள்ளி 478.300 கிராம் மீனாட்சியம்மன் கோயிலில் ரொக்கமாக 29,715 ரூபாயும் கிடைக்கப்பெற்றது என கோயில் நிர்வாகம் அறிவிப்பு

நிலக்கோட்டை அருகே

# லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக உதவியாளர் கைது

## திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே முசுவனுத்து கிராம நிர்வாக அலுவலக கிராம நிர்வாக உதவியாளர் சவேரியார் என்பவர் பட்டா வழங்குவதற்காக பரமேஸ்வரன் என்பவரிடம் ரூ.30 ஆயிரம் லஞ்சம் கேட்டு ரூ.5 ஆயிரம் லஞ்சம் பெற்றுக்கொண்டு மீதம் ரூ.15 ஆயிரம் லஞ்சம் பெறும் போது திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு DSP.நாகராஜன் தலைமையில் ஆய்வாளர் பழனிச்சாமி மற்றும் போலீசார் கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்



திண்டுக்கல்லில்

# தனியார் நிறுவனத்தை மிரட்டி பணம் பறித்த 2 போலி பத்திரிக்கையாளர்கள் கைது

திண்டுக்கல், பழனி ரோடு பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு சென்று தாங்கள் பத்திரிகையாளர்கள் என்றும் தங்கள் நிறுவனத்தை பற்றி தவறாக சித்தரித்து பதிவிடுவதாக மிரட்டி ரூ.10 ஆயிரம் பணம் பறித்துக் கொண்டு மேலும் ஒவ்வொரு மாதமும் ரூ.10 ஆயிரம் பணம் தர வேண்டும் அவ்வாறு தரவில்லை என்றால் தங்கள் நிறுவனத்தைப் பற்றி போலியாக செய்திகள் பதிவிட்டு நிறுவனத்தை மூடி விடுவோம் என்று மிரட்டியது தொடர்பாக நிறுவனத்தின் மேலாளர் நகர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதுகுறித்து நகர் DSP.கார்த்திக் உத்தரவின் பேரில் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் வசந்தகுமார் தலைமையில் சார்பு ஆய்வாளர் கார்த்திகேயன் மற்றும் காவலர்கள் நிறுவனத்தில் இருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டதாக போலி பத்திரிக்கையாளர்களான செட்டி நாயக்கன்பட்டி சிவபுரத்தை சேர்ந்த செந்தில்குமார்(49), திண்டுக்கல், கிழக்கு ராமநாதபுரத்தை சேர்ந்த ராமர்(47) ஆகிய 2 பேரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நத்தம் சிறுமியிடம்

# இன்ஸ்டாகிராமில் பழகி ஆந்திராவிற்கு கடத்திச்சென்று பாலியல் வன்கொடுமை

## வாலிபர் போக்சோவில் கைது



திண்டுக்கல், நத்தத்தை சேர்ந்த 16 வயது சிறுமிக்கும், திருப்பத்தூர் நாட்றம்பள்ளியைச் சேர்ந்த வெங்கடேசனுக்கும் இன்ஸ்டாகிராமில் பழக்கம் ஏற்பட்டு காதலித்தனர்.

இந்நிலையில் சிறுமி மாயமானார். இது குறித்து நத்தம் காவல் நிலைய ஆய்வாளர் பொன்குணசேகரன் தலைமையிலான போலீசார் சிறுமியின் செல்போன் எண்ணை ஆய்வு செய்த போது சிறுமி ஆந்திராவில் இருப்பது தெரியவந்ததை தொடர்ந்து போலீசார் ஆந்திரா, சித்தூர் சென்று வெங்கடேசனை கைது செய்து சிறுமியை மீட்டு விசாரணை மேற்கொண்டு போது வெங்கடேசன் சிறுமியை திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி கடத்தி சென்று பாலியல் வண்புணர்வு செய்தது தெரிய வந்ததை தொடர்ந்து போலீசார் வெங்கடேசனை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்

# செய்யாறில் பன்றி பிடிக்கும் பணியாளரை தாக்கியதாக இருவர் கைது



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நேரு நகர் பகுதியில் நகராட்சி நிர்வாகம் சார்பில் பன்றி பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த செங்கல்பட்டு பகுதியைச் சேர்ந்த சூர்யாவை, கம்பன் நகர் பகுதியைச் சேர்ந்த வடிவேல், தனசேகர் மற்றும் வாசு ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி தாக்கியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து சூர்யா அளித்த புகாரின் பேரில் செய்யாறு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதையடுத்து வடிவேல் மற்றும் தனசேகர் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். மேலும், தலைமறைவாக உள்ள வாசுவை போலீசார் தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக செய்யாறு போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# சென்னையில் மாமன்னர் ஒண்டிவீரனாரின் 255வது நினைவு நாள் அனுசரிப்பு

சென்னையில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் மாவீரருமான மாமன்னர் ஒண்டிவீரனாரின் 255 வது நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், மாமன்னர் ஒண்டிவீரனாரின் திருவுருவப் படத்தை அம்பேத்கர் மக்கள் படை நிறுவனத் தலைவர் மு. மதிப்பறையனார் திறந்து வைத்தார். தொடர்ந்து, ஒண்டிவீரனாரின் வரலாறு குறித்த நூலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தேசியக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் வெளியிட்டார்.

நினைவேந்தல் கூட்டத்துக்கு அருந்ததியர் கட்சியின் மாநிலத் தலைவர் வழக்கறிஞர் பி. புருஷோத்தமன் தலைமை வகித்தார். கட்சியின் ஆலோசகர் முனுசாமி வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணைய உறுப்பினர் எஸ். செல்வகுமார், தலித் விடுதலை இயக்கத்தின் மாநிலத் தலைவர் என்.ஏ. கிச்சா உள்ளிட்டோர் கலந்து கொண்டு, மாமன்னர் ஒண்டிவீரனாரின் வீர வரலாறு மற்றும் சமூகப் பங்களிப்பு குறித்து நினைவேந்தல் உரையாற்றினர்.

மேலும், பல்வேறு ஜன நாயக அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொண்டு, மாமன்னர் ஒண்டிவீரனாரின் வரலாற்றுச் சிறப்புகள் குறித்து கருத்துரையாற்றினர்.

# சின்னமனூர் புறவழிச்சாலையில் அனுமதியின்றி அரசு நிலத்தில் பேவர் பிளாக்?

## ஆக்கிரமிப்பு அபாயத்தில் தேசிய நெடுஞ்சாலை

தேனி மாவட்டம் சின்னமனூர் புறவழிச்சாலையில் அமைந்துள்ள திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலை பகுதியில், தனியார் உணவகம் மற்றும் பேக்கரி ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான அரசு நிலத்தில், முறையான முன்அனுமதியின்றி தன்னிச்சையாக பேவர் பிளாக் (Paver Block) கற்கள் பதிக்கப்பட்டு தனியார் கார் பார்க்கிங் பகுதியாக மாற்றப்பட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. வணிக நிறுவனங்கள் தங்கள் கடைகளுக்கு வாகனங்கள் வந்து செல்ல 'ரோடு ஆக்சஸ்' (Road Access) என்ற அணுகுசாலை உரிமையை பயன்படுத்தி கொள்ளலாம் என்ற போதிலும், அரசு நிலத்தில் இதுபோன்ற மாற்றங்களை செய்ய தேசிய நெடுஞ்சாலைத் துறையிலோ அல்லது உள்ளூர் நகரமைப்புத்துறையிலோ தகுந்த அனுமதி பெறப்பட்டுள்ளதா? அல்லது கள ஆய்வு நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா? என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஏற்கனவே இந்த நெடுஞ்சாலை பகுதி குறுகலாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவி வருகிறது.

இந்த சூழலில், சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்ய அரசு தரப்பில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வரும் வேளையில், தன்னிச்சையாக அமைக்கப்படும் இதுபோன்ற குவது தவறான முன்னுதாரணமாகும்.

எனவே, அசம்பாவிதங்கள் ஏதும் நடக்கும் முன்பும், ஆக்கிரமிப்புகள் தீவிரமடையும் முன்பும், சம்பந்தப்பட்ட







பேவர் பிளாக் அமைப்புகள் எதிர்காலத்தில் நிரந்தர ஆக்கிரமிப்புகளுக்கு வழிவகுக்கும் என்று பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

முதற்கட்டமாக பேவர் பிளாக் பதித்து, பின்னர் தற்காலிக நிழற்கூடங்கள் அமைத்து, நாளடைவில் முழுமையான ஆக்கிரமிப்பாக இது உருவெடுக்க வாய்ப்புள்ளது. தனிநபர்கள் தங்கள் சுயலாபத்திற்காக அரசு சொத்தையும், பொதுமக்களின் சாலை பாதுகாப்பையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக் தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் உடனடியாக நேரில் சென்று உரிய ஆய்வு மேற்கொண்டு, அனுமதி பெறப்படாமல் விதிமீறல்கள் நடந்திருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆக்கிரமிப்புகள் வளர விடக் கூடாது என்றும் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆரணியில் ரூ.20 கோடிக்கும் மேற்பட்ட வளர்ச்சிப் பணிகள்

## கலெக்டர் வந்தனா கார்க் நேரில் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டாரத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்



சித்தலைவர் வந்தனா கார்க் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆரணி வட்டம் புதுக்காமூரில் உள்ள அருள்மிகு புத்திர காமாடீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டார். தொடர்ந்து ஆரணி நகராட்சியில் ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன பேருந்து நிலையப் பணிகளை ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பேருந்து நிலையத்தில் 38 கடைகள், காவல் நிலையம், காத்திருப்பு அறை, டிக்கெட் வழங்குமிடம், ஆண், பெண்களுக்கான தனித்தனி கழிவறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகள் இடம்பெறுகின்றன.

ஆரணி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர், மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், சுவை மற்றும் உணவுப்பொருட்களின்இருப்பு குறித்து கேட்டறிந்தார். பள்ளி வளாகத்தை தூய்மையாக பராமரிக்க மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தலைமை ஆசிரியருக்கு அறிவுறுத்தினார். ஆரணி அரசு மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு செய்தார். நோயாளிகளின் உறவினர்களிடம் மருத்துவ சேவைகள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் அணுகுமுறை குறித்தும் கேட்டறிந்தார். மருத்துவமனைவளாகத்தில் ரூ.5.85 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை வளாகத்தையும் பார்வையிட்டு, மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தரவிட்டார்.

புனலப்பாடி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் எடை, உயரம், வருகைப் பதிவேடு மற்றும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து புனலப்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு வழங்கப்படுவதை பார்வையிட்டு, உணவின் தரத்தையும் ஆய்வு செய்தார்.

செய்யாறு வட்டம் மேல்சீசமங்கலத்தில் ரூ.4.47 கோடி மதிப்பீட்டில் 13 பட்டு நெசவுக் கூடங்கள் மற்றும் 4 நூல் முறுக்கும் கூடங்களுடன் அமைக்கப்பட்டு வரும் டாக்டர் கலைஞர்கருணாநிதிநூற்றாண்டு பட்டு பூங்கா பணிகளையும் ஆட்சியர் ஆய்வு செய்தார். பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடிக்க அறிவுறுத்தியதுடன், நுழைவு வாயில் மற்றும் அணுகுசாலை அமைப்பில் இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கவும், ஆரணி பட்டின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் ஓவியங்கள் வரையவும் அறிவுறுத்தினார்.

ச.வி.நகரில் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் ஜாகீர் அரண்மனை ராணி மஹால் புனரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டார். அங்குள்ள நியாயவிலைக் கடையில் பொருட்களின் இருப்பு, தரம் மற்றும் விநியோகப் பதிவுகளை ஆய்வு செய்தார்.

மேலும், விபிஜி ராம்ஜி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையை பார்வையிட்டு, அங்கு வளர்க்கப்படும் விதைகள், பழச்செடிகள், பூச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் குறித்து கேட்டறிந்தார். ஆற்காடு –விழுப்புரம் சாலையில் இரும்பேடு பகுதியில் ரூ.49.68 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளையும் ஆய்வு செய்தார். ஆரணி நகராட்சி சிறந்த நகராட்சிக்கான முதலமைச்சர் விருதில் 2ம் பரிசு பெற்றதற்கான சான்றிதழ் மற்றும் ரூ.20 லட்சத்திற்கான காசோலையை நகராட்சி ஆணையர் வேலன், மாவட்ட ஆட்சித்தலைவரிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார். ஆய்வின்போது ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் சிவநாத், ஆரணி நகராட்சி ஆணையர் வேலன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல்மலை கிராம பகுதிகளில் அனுமதி இன்றி செயல்பட்ட தங்கும் விடுதிகளுக்கு வட்டாச்சியர் தலைமையில் சீல் வைத்தனர்

### விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்:

# வட்ட அளவில் கூட்டம் நடத்த ஆட்சியர் உறுதி - போலீசார் புகைப்படம் எடுத்ததால் மீண்டும் பரபரப்பு

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) மலர்விழி உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கூட்டம் தொடங்கியதும், கடந்தகூட்டங்களில் விவசாயிகள் அளித்த மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். மேலும், மாதந்தோறும் கோட்ட அளவில் நடைபெறும் கூட்டத்திற்கு பதிலாக முன்பு நடைமுறையில் இருந்ததுபோல் வட்ட அளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டங்களை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு ஆட்சியர், தற்போதைய கூட்டத்தை முடித்த பின்னர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வட்ட அளவிலான கூட்டம் நடத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதனை ஏற்காத விவசாயிகள் உடனடியாக உறுதியளிக்க வேண்டும் என வலியுறுத்தியதால், ஆட்சியருக்கும் விவசாயிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் கூட்டரங்கில்சிறிதுநேரம் கூச்சல், குழப்பம் நிலவியது. பின்னர் ஆட்சியர் அருகிலுள்ள அறைக்கு சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து கூட்டரங்கிற்கு திரும்பிய அவர், வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதற்காக சில நாட்கள் கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார். இதையடுத்து விவசாயிகள் சமாதானமடைந்து கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், சாத்தனூர் அணையை தூர்வார வேண்டும், நீர்நிலைகளின் வரத்து கால்வாய்களை சீரமைத்து தூர்வார வேண்டும், ஏரி மற்றும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என வலியுறுத்தினர். மழைக்காலத்திற்கு முன்பாக வரத்து கால்வாய்களை சீரமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், அனைத்து பயிர்க்கடன்களையும் ரத்து செய்ய வேண்டும், ஒவ்வொரு ஊராட்சியிலும் நெற்களம் அமைக்க வேண்டும், மண் பரிசோதனை நிலையங்கள் செயல்படும் இடங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக தெரிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுக்க வருவாய்த்துறை அனுமதி வழங்கிய பின்னரும், சம்பந்தப்பட்ட துறையினர் விவசாயிகளை தடுப்பதாக புகார் தெரிவித்த விவசாயிகள், இதற்கு உரிய தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர்.

வேளாண்மைத் துறை சார்பில் வழங்கப்படும் விதை நெல், மணிலா உள்ளிட்ட விதைகளின் தரத்தை அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும், முளைப்புத் திறன் குறைந்த விதைகள் வழங்கப்படுவதாக கூறப்படும் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர். வறட்சியை எதிர்கொள்ளும் வகையில் தரமான வீரியமிக்க விதைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், யூரியா உள்ளிட்ட உரங்கள் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர். ஜமாபந்தி உள்ளிட்ட அரசுநிகழ்ச்சிகளில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லைஎன்றும்குற்றம்சாட்டினர்.

கூட்டத்தின் இறுதியில் விவசாயிகளிடம் இருந்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதனிடையே கூட்டம் நிறைவடைவதற்கு முன்பு கூட்டரங்கில் இருந்த விவசாயிகளை துறையினர் மற்றும் போலீசார் கைபேசியில் புகைப்படம் எடுத்ததாக கூறப்படு கிறது. இதுகுறித்து விவசாயிகள் கேள்வி எழுப்பியபோது, நடவடிக்கை எடுப்பதற்காக புகைப்படம் எடுக்கப்படுவதாக தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் போலீசாருக்கு எதிராக முழக்க மிட்டு, கூட்டரங்கிலிருந்து போலீசார் வெளியேற வேண்டும் என வலியுறுத்தினர். இதனால் மீண்டும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் பரபரப்பான சூழ்நிலையில் நிறைவடைந்தது.

### மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

# அண்ணா முதியோர் காப்பகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 15வது வட்டம் பழையநாபாளையம் பகுதியில் அமைந்துள்ள அண்ணா முதியோர் காப்பகத்தில் வசிக்கின்ற அனைவருக்கும் அறுசுவை காலை அசைவ உணவு வழங்கப்பட்டது.

பதினைந்தாவது வட்டச் செயலாளர்கே.அங்குசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.





அண்ணா காப்பகத்தில் வசிக்கின்ற மாணவர்கள், முதியவர்கள், பணியாளர்கள் என அனைவருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு காலை அறுசுவை அசைவ உணவு வழங்கப்பட்டது மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அசைவ உணவுகளைவழங்கினார். மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்ப டத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பகுதி ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் எஸ். புஷ்பராஜ், வட்ட இளைஞரணிதுணைசெயலாளர் எ.சீனிவாசன், மணலி புதுநகர் வினோத் உள்ளிட்ட திமுகவினர் திரளாக கலந்து கொண்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு தங்களது காப்பகத்திற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் காப்பகநிர்வாகிகள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

# 92வது ஆண்டை நிறைவு செய்த மேட்டூர் அணை: 12 மாவட்டங்களில் 17 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு பயன்படுகிறது

காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மேட்டூர் அணை 92 ஆண்டுகளை நிறைவு செய்து, 93வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது.

கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகும் காவிரி ஆறு தமிழகம் வழியாகச் சென்று கடலில் கலக்கிறது. கர்நாடகாவில் குறைந்த அளவு பகுதியில் ஓடும் காவிரி ஆறு, தமிழகத்தின் வழியாக 700 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்கிறது. பருவமழை வரும்போது நீர்த்தேக்கத்துக்கு வழியில்லாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

எனவே, பருவமழைக் காலங்களில் காவிரி நீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்தும் நோக்கில், அப்போதைய ஆங்கிலேய அரசு 1925ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டுமானப் பணியைத் தொடங்கியது. வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு பொறியாளரான கர்னல் எல்லீஸ் தலைமையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றிய நிலையில், 9 ஆண்டுகளுக்குப் பிறகு 1934 ஜூலை 14ம் தேதி கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன.



இவ்வாறு ரூ.4.80 கோடி செலவில் கட்டப்பட்ட அணையை, 1934 ஆக.21ம் தேதி அப்போதைய சென்னை கவர்னர் ஜார்ஜ் பிரெட்ரிக் ஸ்டான்லி திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேட்டூர் அணையின் நீளம் 5,300 அடி. நீர்த்தேக்கப் பகுதி 59.25 சதுர மைலும், மொத்த கொள்ளளவு 93.5 டிஎம்சியும் ஆகும்.

அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 120 அடி.

அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சுமார் 17 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு பயன்படுகிறது.

அணையில் உபரி நீரை வெளியேற்ற 16 கண் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தலா 20 அடி உயரமும், 60 அடி அகலமும் கொண்டவை.

இதற்கு அணை கட்டிய கண்காணிப்புப் பொறியாளரான 'கர்னல் எல்லீஸ்' பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை கட்டப்பட்ட 1934 முதல் ஜூன் 12ம் தேதி பாசனத்துக்கு 20 முறை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக 11 முறையும், காலதாமதமாக 62 முறையும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளன. பல சிறப்புகள் வாய்ந்த மேட்டூர் அணை தனது 93வது ஆண்டில் நேற்று அடியெடுத்து வைத்தது.

நீர் வரத்து சரிவு: இதனிடையே அணைக்கு நேற்று காலை விநாடிக்கு 10,579 கனஅடியாக இருந்த நீர்வரத்து, மாலை 10,414 கனஅடியானது.

குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி திறக்கப்பட்டு வருகிறது. நீர்மட்டம் 85.17 அடியாகவும், நீர் இருப்பு 47.30 டிஎம்சியாகவும் உள்ளது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA